இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 23-09-2025

# வெளியுறவுக் கொள்கையின் தோல்வி!

**அமெரிக்காவில் இருந்து வரும் செய்திகள் அனைத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வெளியுறவுக் கொள்கை தோற்று வருவதையே உணர்த்துகின்றன.**

**வாரம்தோறும் ஏதாவது ஒரு வெளிநாட்டில்தான் இந்தியப் பிரதமர் மோடி இருக்கிறார். உள்நாட்டைத்தான் கவனிக்கவில்லை, வெளிநாடுகளில் ஆவது இந்தியப் பெருமையை நிலைநாட்டுவார் என்று நம்பினோம். ஆனால் அதிலும் மண்தான் விழுந்துள்ளது.**

அதிலும் குறிப்பாக அமெரிக்க அதிபர் டிரம்ப், நமது பிரதமர் மோடியின் நட்பானது மிகக் கெட்டியானதாக இருந்தது. இவர் வெற்றிக்கு அவரும், அவர் வெற்றிக்கு இவரும் உழைத்தார்கள். உருகினார்கள். பிணைந்தார்கள். இருவருமே ஒருவர்தான் என்று காட்டிக் கொண்டார்கள். இறுதியாகப் பார்த்தால், இந்தியாவின் மீது எல்லாவகையிலும் தாக்குதல் நடத்துவதை தனது ஹாபியாக மாற்றிக் கொண்டு விட்டார் அமெரிக்க அதிபர் டிரம்ப்.

முதலில் இந்தியாவுக்கு வரிச்சுமையை அதிகப்படுத்தினார். இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு முதலில் 25 விழுக்காடு வரியை அதிகப்படுத்தினார். பின்னர், கூடுதலாக 25 விழுக்காடு வரியை அதிகரித்துள்ளார். இதன் காரணமாக அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கு 50 விழுக்காடு வரி இனி செலுத்த வேண்டும்.

அடுத்ததாக இந்தியாவைப் பற்றி மோசமான பிம்பத்தை உருவாக்கினார் டிரம்ப். "அமெரிக்கா மீது வரிகளையும் பிற தடைகளையும் விதித்துள்ள 'மோசமான நாடுகளில்' ஒன்று" என்று இந்தியாவைப் பட்டியலிட்டார் டிரம்ப்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறினார்கள் என்று சொல்லி பலரையும் கைது செய்து இந்தியாவுக்கு நாடு கடத்தினார்கள். அதில் கொடுமையானது, அவர்கள் கைவிலங்கு போட்டு அனுப்பப்பட்டதாக காட்சிகள் வெளியானது.

பின்னர், அமெரிக்காவுக்கு படிக்க வரும் மாணவர்களுக்கு விசா வழங்குவதை நிறுத்தி வைக்கச் சொன்னார் டிரம்ப். அதன்படி மாணவர் விசா வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விசா கட்டுப்பாடுகளைக் கடுமையாக்கும்படி அந்த நாட்டு வெளியுறவுத் துறை உத்தரவு போட்டுள்ளது.

**இந்தியா - பாகிஸ்தான் மோதலின் போது டிரம்ப் சொன்ன வாக்குமூலங்கள் இந்தியாவின் மதிப்பைக் குறைப்பதாகவும், 'எனது பேச்சைக் கேட்டுத் தலையாட்டும் நாடு இந்தியா' என்பதைச் சொல்வதாகவும் அமைந்திருந்தன. 'நான் சொன்னதால்தான் போர் நிறுத்தப்பட்டது' என்று 26 முறை சொல்லி இருக்கிறார் டிரம்ப்.**

**இந்த வரிசையில் உச்சகட்டமாக, ஹெச் 1 பி விசா கட்டணம் 88 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அமெரிக்காவில் வெளிநாட்டவரை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்கள் 88 லட்சம் செலுத்த வேண்டும். இதனால் அமெரிக்காவில் பணிபுரியும் இந்தியர்கள் பெரும் பாதிப்பை அடைவார்கள். வெளிநாட்டவரை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்கள் 1.75 லட்சம் முதல் 4.50 லட்சம் வரை கட்டணமாக இதுவரை செலுத்தி வருகிறது. இதைத்தான் 88 லட்சமாக ஆக்கிவிட்டார் டிரம்ப்.**

**'அமெரிக்க வேலை வாய்ப்புகளை வெளிநாட்டவர் திருடுகிறார்கள்' என்பதால் இந்த நடவடிக்கை என்று சொல்லப்படுகிறது. அமெரிக்கத் தொழிலாளர்களது நன்மைக்காக வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான விசா கட்டணத்தை அதிகரித்ததாக பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் இந்தக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டதை ஒரே ஒருமுறை செலுத்தினால் போதும் என்று விளக்கம் அளித்துள்ளார்கள்.**

**அமெரிக்காவில் வழங்கப்படும் ஹெச் 1 பி விசாக்களில் ஐந்தில் ஒரு பங்கை இந்தியர்களே பெற்று வந்தார்கள். அதிலும் குறிப்பாக கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் இப்படி வழங்கப்படும் விசாக்களில் 70 விழுக்காடு விசாக்களை இந்தியர்களே பெற்று வருவதாகவும் சொல்லப்படுகிறது. டிரம்பின் அறிவிப்புக்குப் பிறகு, ஹெச் 1பி விசா வைத்திருக்கும் அனைவரையும் உடனடியாக நாடு திரும்ப அறிவித்துள்ளார்கள். விடுமுறைக்காக சொந்த நாடுகளுக்குச் சென்றிருந்தால் அவர்கள் உடனடியாக அமெரிக்கா சென்றாக வேண்டும்.**

அமேசான், டாடா கன்சல்டன்சி, மைக்ரோசாப்ட், மெட்டா, ஆப்பிள், கூகுள், டெலாய்ட், இன்போசிஸ், விப்ரோ, மகேந்திரா ஆகிய முக்கியமான, பெரிய நிறுவனங்கள் அனைத்திலும் ஹெச் 1 பி விசா வாங்கிய தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகம். தொழிலாளர்களுக்கும், நிறுவனங்களுக்கும் சிக்கலை ஏற்படுத்தி இருக்கிறது டிரம்ப் அறிவிப்பு.

'இந்த அறிவிப்பு இந்திய தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களை வெகுவாக பாதிக்கும்' என்று தேசிய மென்பொருள், சேவை நிறுவனங்களின் கூட்டமைப்பான 'நாஸ்காம்' அறிவித்துள்ளது.

மேலே குறிப்பிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் இருந்து ஆக்‌ஷனும் இல்லை, ரியாக்‌ஷனும் இல்லை. 'இதைப் பற்றி ஆய்வு செய்வோம்' என்று இந்திய வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் சொல்லி இருக்கிறார். 'இருநாட்டு மக்கள் தொடர்பு முக்கியமானது. இதனை கொள்கை வகுப்பாளர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்' என்று அருள் பாலித்திருக்கிறார் அவர். இதெல்லாம் அதிபர் டிரம்புக்குப் புரியுமா? புரியாது. இவ்வளவு தான் மோடி ஆட்சியால் முடியும்.

இந்தியர்களின் நலனைக் காக்கும் வெளியுறவுக் கொள்கையில் மோடி அரசு தோல்வி அடைந்துவிட்டதையே இது காட்டுகிறது. இந்திய, இந்தியர் நலன்களுக்கு அக்கறையில்லாத பிரதமர் மோடியின் வெளிநாட்டுப் பயணங்களால் என்ன பயன்?

**மன்மோகன் சிங்கை, 'பலவீனமான பிரதமர்' என்று எப்போதும் கிண்டல் அடிப்பார் மோடி. 'பலமான பிரதமர்' என்று சொல்லிக் கொண்டவர் அல்ல மன்மோகன். ஆனால், 'உலகத்தை ஆளும் விஸ்வகுரு'வாக உருவகப் படுத்தப்படும் மோடியின் பிம்பம் உள்நாட்டைப் போலவே வெளிநாட்டிலும் பலவீனமானதுதான் என்பதையே அமெரிக்க அறிவிப்புகள் சொல்கின்றன.**

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.9.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு செவிலியர் பயிற்சி பள்ளியில் பயின்றவர்களுக்கு, 1231 கிராம சுகாதார செவிலியர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டு அதற்கான பணி நியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார்.

# பாலஸ்தீனத்தில் மக்கள் அனுபவித்து வரும் கொடுமைகள் முடிவிற்கு வர ஒன்றிய அரசு உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்!

## நபிகள் நாயகம் 1500வது பிறந்த நாள் விழாவில் முதல்வர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி



சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று முன்தினம் (21.9.2025) நடைபெற்ற, நபிகள் நாயகம் அவர்களின் 1500வது பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விழாக் குழுவினர் நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தனர். இவ்விழாவில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, எஸ்.எம்.நாசர், முன்னாள் அமைச்சர் அ.அன்வர் ராஜா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா, தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைவர் கே.நவாஸ் கனி எம்.பி., ஆர்க்காடு இளவரசர் நவாப் முகமது அப்துல் அலி, சமுதாய ஒருங்கிணைப்பாளர் அப்பல்லோ ஹனிஃபா, மனிதநேய ஜனநாயக கட்சித் தலைவர் தமீமுன் அன்சாரி, எஸ்.டி.பி.ஐ. கட்சித் தலைவர் நெல்லை முபாரக், அரசு தலைமை ஹாஜி முகம்மது அக்பர், தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபைத் தலைவர் பி.ஏ.காஜா முயீனுத்தீன் பாகவி, விழாக்குழு உறுப்பினர் அ.முகம்மது காசிம் அனீஸ், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், முகமது ஷாநவாஸ், மு.அப்துல் வஹாப், ப.அப்துல் சமது, ஜே.எம்.எச்.அசன் மவுலானா, இஸ்லாமிய இயக்கத் தலைவர்கள், உலமாக்கள், மார்க்க அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

அன்பை, அமைதியைப் போதித்தார்; அறத்தை வலியுறுத்தினார். அடுத்தவர்க்கு உதவிகள் புரிவதை உயர்ந்த பண்பாகக் கருதினார். அடுத்தவர் நலன்கருதி ஆற்றும் அருட்பணிகளையே அறம் என வலியுறுத்தினர்." என்று சொன்னார்! அப்படிப்பட்ட நபிகளாரின் 1500வது பிறந்த நாளில் காசாவில் நடத்தப்பட்டுவரும் துயரத்தைப் பார்த்து மனசாட்சி உள்ள யாரும் கவலைப்படாமல் இருக்க முடியாது. இதற்கு விரைவில் ஒரு நல்ல தீர்வு ஏற்பட வேண்டும். உடனடியாக பாலஸ்தீன மக்கள் அனுபவித்து வரும் கொடுமைகளும் முடிவிற்கு வர வேண்டும். அதற்கு ஒன்றிய அரசு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று நான் ஏற்கெனவே பதிவு செய்திருக்கிறேன். மீண்டும் ஒருமுறை இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் வலியுறுத்துகிறேன்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தான் 1969லேயே "மீலாது நபிக்கு, அரசு விடுமுறை" என்று அறிவித்தார். அதை 2001இல் அ.தி.மு.க. ரத்து செய்ததும், மறுபடியும் 2006 இல் கழக ஆட்சியில் விடுமுறை வழங்கியதும் உங்கள் எல்லோருக்கும் தெரியும்!

### இஸ்லாமியப் பெருமக்களுக்கு கழக அரசு செய்த நன்மைகள்!

அதுமட்டுமல்ல... ஏன் நாங்கள் எப்போதும் 'உங்களில் ஒருவன்' என்று சொல்கிறோம்! உங்களின் கோரிக்கைகளை ஆட்சியின்போது ஒவ்வொரு முறையும் பார்த்துப் பார்த்து செய்து கொடுத்தோம். அவற்றில் சிலவற்றை மட்டும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டில் இஸ்லாமியர்களுக்கு 3.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு;**

**உருது பேசும் முஸ்லீம்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது. சிறுபான்மையினர் நல வாரியம் தொடக்கம்;**

**வக்பு வாரிய சொத்துகளை பராமரிக்க மானியம்;**

**தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் தொடக்கம்;**

**உருது அகாடமி தொடக்கம்;**

**காயிதே மில்லத் மணிமண்டபம் கட்ட நிதி ஒதுக்கீடு**

- என்று இஸ்லாமிய மக்களின் நலனுக்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்த திட்டங்களையெல்லாம் பட்டியலிடத் தொடங்கினால், பல மணி நேரமாகும்!

### சென்னை விமான நிலையம் அருகே 'ஹஜ்' இல்லம்!

இதன் தொடர்ச்சியாகதான், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், சென்னை விமான நிலையம் அருகே கட்டப்பட்டு வரும், 'ஹஜ் இல்லம்' உள்ளிட்ட ஏராளமான திட்டங்களை - முன்னெடுப்புகளைச் செய்துகொண்டு இருக்கிறோம்!

இப்போதும், இந்த மேடையில் பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டது. எஸ்.டி.பி.ஐ. கட்சி தலைவர் சகோதரர் நெல்லை முபாரக் அவர்கள் நபிகள் நாயகம் அவர்களைப்பற்றி பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். ஏற்கெனவே, பெருந்தகை அவர்களைப்பற்றி தமிழ்நாடு பாடநூலில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற கோரிக்கைகளையெல்லாம் பரிசீலித்து பரிசு வழங்க வேண்டும் என்று சொன்னீர்கள். உறுதியாகப் பரிசீலிக்கப்படும். நியாயமான கோரிக்கைகளை நிச்சயமாக நிறைவேற்றித் தருவோம்.

### இஸ்லாமியர்க்கு இடர் என்றால் துணை நிற்கும் இயக்கம் தி.மு.க.!

அதுமட்டுமல்ல, இஸ்லாமியர்களுக்கு ஒரு இடர் வருகிறது என்றால், உங்களுக்குத் துணை நிற்கும் முதல் அரசியல் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான்!

குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக, உண்மையான தோழமை உணர்வோடு போராடியது தி.மு.க.தான்! அந்தச் சட்டத்தால் யாராவது பாதிக்கப்பட்டார்களா என்று கேள்வி எழுப்பியதும் அந்தச் சட்டத்திற்கு எதிராகப் போராடிய இஸ்லாமியர்கள் மீது தடியடி நடத்தியதும் யார் என்று, உங்களுக்கு நன்றாகவே தெரியும்!

அதேபோல், முத்தலாக் சட்டத்தைக் கொண்டு வந்தபோது அ.தி.மு.க. எப்படி இரட்டை வேடம் போட்டது என்று எல்லோருக்கும் தெரியும்! அதனால்தான், நம்முடைய அன்வர் ராஜா போன்றவர்கள், துரோகத்தின் கூடாரமாக இருக்கும் கட்சிகளை புறக்கணித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்திருக்கிறார்கள்!

### இஸ்லாமியர்க்கு எதிரான சட்டங்கள்! தடை வாங்கியிருக்கிறோம்!

அதேபோல், வக்பு சட்டத் திருத்தத்திலும் அ.தி.மு.க. நடத்திய கபட நாடகத்தை எல்லோரும் பார்த்தார்கள்! ஆனால், தி.மு.க. உள்ளிட்ட இயக்கங்கள் நடத்திய சட்டப் போராட்டத்தால் தான் இன்றைக்கு, ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்த முக்கியத் திருத்தங்களுக்கு உச்ச நீதிமன்றத்தில் தடை வாங்கியிருக்கிறோம்!

பா.ஜ.க. செய்து வரும் மலிவான சர்வாதிகார எதேச்சாதிகார அரசியலுக்குத் துணை போகக்கூடிய துரோகத்தில் ஈடுபட்டுள்ளவர்களை புறக்கணிக்க வேண்டும்! நபிகள் நாயகத்தின் 1500ஆவது பிறந்தநாளை கொண்டாடும் இந்த விழா மேடையில் நின்று நான் இஸ்லாமிய மக்களுக்கு ஒரு உறுதியைத் தருகிறேன்.

### உங்களில் ஒருவராக தி.மு.க. என்றும் இருக்கும்!

இசுலாமிய மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பெற்றுத்தரும் இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் உங்கள் கூடவே உங்களில் ஒருவராக இருக்கும்!

நபிகளார் வலியுறுத்திய அன்பு, உலகெங்கும் அனைத்து உள்ளங்களிலும் பரவ வேண்டும்! போர்கள் அற்ற வன்முறைகள் அற்ற வெறுப்புகள் அற்ற ஆதிக்கம் அற்ற உலகமாக, நாம் வாழும் உலகம் மாற வேண்டும்!

நபிகளார் சொன்ன பொன்மொழிகளை வாழ்வியல் நடைமுறைகளாக மக்கள் கடைப்பிடிக்க வேண்டும்! எங்கும் அமைதியும் நல்லிணக்கமும் உண்டாக வேண்டும் என்று சொல்லி! உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## இடைக்கழிநாடு பேரூராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

செய்யூர், செப். 23 –

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் அடுத்த இடைக்கழி நாடு பேரூராட்சியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகம் மாவட்ட கலெக்டர் சினேகா தலைமையில் நடைபெற்றது

இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., எ.செல்வம் எம்.பி., மு.பாபு எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இதில் பேரூராட்சி தலைவர் சம்யுக்தா அய்யனார், பேரூர் செயலாளர் மோகன்தாஸ், இனியரசு, ரஞ்சித், சரண்ராஜ், சமூக ஆர்வலர் அய்யனார் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள், கிளைச் செயலாளர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.




சென்னை, காமராஜர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (21.9.2025) நடைபெற்ற, தென்னிந்திய நடிகர் சங்கத்தின் 69 வது பொதுக்குழுக் கூட்டத்தில் சங்கத் தலைவர் எம்.நாசர், பொதுச் செயலாளர் விஷால், பொருளாளர் கார்த்தி, துணைத் தலைவர்கள் பூச்சி எஸ். முருகன், கருணாஸ் உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலையில், பழம்பெரும் நடிகை திருமதி எம்.என்.ராஜம் அவர்களுக்கு "வாழ்நாள் சாதனையாளர் விருது" வழங்கிக் கவுரவிக்கப்பட்டது. மேலும் கடந்த 2024–ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகள் பட்டியலில் இடம்பெற்ற நடிகை ஊர்வசி, நடிகர்கள் எம்.எஸ்.பாஸ்கர், ஜி.வி.பிரகாஷ் மூவரும் இந்நிகழ்ச்சியில் பாராட்டி கவுரவிக்கப்பட்டனர்.